# உடல் தானம் செய்வோரின் கவனத்திற்கு

தாங்கள் தங்களின் இறப்பிற்க்கு பின் தங்களின் உடலைத் தானமாக செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களின் படிப்பிற்காக கொடுக்க முன்வந்துள்ள பெறும் நற்செய்கைக்கும், தொண்டுள்ளத்திற்கும் முதலில் பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டு தங்கள் பெயர் எங்களிடம் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், சில விவரங்களை படிவங்களில் தாங்கள் பூர்த்தி செய்து சமர்பிக்க வேண்டியிருப்பதால் தங்களின் கவனத்தை தற்போது ஈர்க்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

## தாங்கள் செய்யவேண்டுவது யாதெனின்,

1. முதலில் ஒரு பத்து ரூபாய் பதிவுத்தாளில், தாங்கள் முழுமனதோடும், யாருடைய கட்டாயத்தின் பேரிலுமில்லாமல், விருப்பத்தோடு, ஒரு உயில் போல தங்களின் இறப்பிற்குப்பின் தங்களின் முழு உடலை செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரிக்கு (மருத்துவ மாணவர்களின் படிப்பிற்காக) தானமாக தருவதாக ஒரு உறுதி மொழிப்படிவம் எழுத வேண்டும்.

2. அதில் தங்களின் கணவர்/துணைவியார் மற்றும் வாரிசுதாரர்கள் அனைவரின் பெயரும் குறிக்கப் பெற்று அவர்கள் அனைவரிடமும் முழு உடல்தானத்திற்காக சம்மதத்திற்கான ஒப்புதல் கையொப்பமும் பெற்று சமர்பிக்க வேண்டும்

3. பத்திரத்தில் தங்களின் புகைப்படம் ஒன்றும், சான்றிதழ்க்காக ஒரு புகைப்படம் ஒன்றும் ஒட்டப்பட வேண்டும்.

4. இரண்டு சாட்சிகளின் கையொப்பம் பதியப்பெற வேண்டும்

5. வாரிசுதாரரோ அல்லது உறவினரோ தங்களின் இறப்பினை கல்லூரி முதல்வருக்கும், உடற்கூற்றியல் துறை தலைவருக்கும் தெரிவிக்க ஒப்புதலளித்தது போல் தெரிவிக்க வேண்டும்.

6. இறப்பிற்கான மருத்துவச் சான்றிதழும், அதில் இறப்பிற்கான காரணம் குறிக்கப் பெற்று, தகுதியான மருத்துவரிடம் வாங்கி சமர்பிக்க வேண்டும். மருத்துவச் சான்றிதழ் இன்றி உடல் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7. மரணம் இயற்கையானதாக இருக்க வேண்டும். தற்கொலை, மற்றும் மெடிகோலீகல் பிரச்சினை, போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்ட உடல்கள், மஞ்சள் காமாலை, எய்ட்ஸ் மற்றும் தீவிர தொற்று நோய்களால் தாக்குண்டவர்களின் உடல்கள் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

8. இறப்பு ஏற்பட்ட ஒரு நாளைக்குள் உடலை ஒப்படைப்பது நல்லது.

9. உடலை தங்கள் இருப்பிடத்தில் இருந்து கல்லூரி முதல்வரிடம் கொண்டு வந்து கல்லூரியில் ஒப்படைக்கும் பொறுப்பு தங்களுடைய குடும்பத்தாருடையது.

10. விடுமுறை நாட்களில் மருத்துவமனையில் உடலை ஒப்படைக்கலாம்.

11. கண்தானம் செய்திருப்பவர்கள். இறப்பு ஏற்பட்ட ஓரிரு மணிக்குள் கண் வங்கிக்கு தகவல் கொடுத்தால் அவர்கள் வீட்டிற்கே வந்து எடுத்து செல்வார்கள். (அதற்க்கான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்) பின்னர் உடலை சடங்குகள் முடித்து பின்னர் கல்லூரி முதல்வர் வசம் ஒப்படைக்கலாம்.

12. உடலை ஒப்படைத்த பின்னர் திரும்ப பெற இயலாது.

முதல்வர்